


# “திருக்குறள் வழியில், திராவிட மாடல் அரசு!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க 75 அறிவுத்திருவிழா’ நிகழ்ச்சியின் ஒருபகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக்கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தில் ‘வரலாறாய் வாழும் இயக்கம்’ என்ற தலைப்பில், கழகக் கொள்கைபரப்புச் செயலாளர் முனைவர் இரா.தி.சபாபதி மோகன் அவர்கள் ஆற்றிய உரை :**

## முனைவர் இரா.தி.சபாபதி மோகன்

### கழகக் கொள்கைபரப்புச் செயலாளர்

கழகத்தின் இருவண்ணக் கொடி என்பது, சுயமரியாதை இயக்கத்தின்- தன்மானத்தின் கவசம்.

இந்திய ஒன்றியத்தில் எத்தனையோ கட்சிகள் தோன்றி மறைந்திருக்கின்றன. 75 ஆண்டுக்கால வரலாற்றைப் பெற்ற கட்சிகள் இருக்கின்றன. ஆனால், அந்தக் கட்சிகளின் கொடி தொடர்ந்து, அதே அமைப்பில் இருக்கிறதா? இல்லை. கட்சிகளினுடைய கொடிகளின் அமைப்பு மாறி இருக்கிறது. கட்சிகளின் சின்னம் மாறி இருக்கிறது, வண்ணம் மாறி இருக்கிறது, இலட்சிய எண்ணம் மாறி இருக்கிறது. ஆனால், இந்திய துணைக்கண்டத்தில் வண்ணம் மாறாமல், இலட்சிய எண்ணம் மாறாமல், சின்னம் மாறாமல் இருக்கிற ஒரே இயக்கம், ஒரே கொடி, கழகத்தின் இருவண்ணக் கொடிதான்.

### கரங்களிலே தாங்கிய கொடி

மாண்பமை கழகத்தின் தலைவர் ஐயா கலைஞர் அவர்கள் 70 ஆண்டு காலம் தூக்கிப் பிடித்த அவர் கரங்களிலே தாங்கிய கொடி. பேரறிஞர் அண்ணா அவர்கள் 20 ஆண்டு காலம் தூக்கிப் பிடித்த கொடி. 15 வயது தொடங்கி, வணக்கத்திற்குரிய கழகத்தின் தலைவர் மாண்பமை முதல்வர் அவர்கள் 55 ஆண்டு காலம் உயர்த்திப் பிடித்த கொடி. எனவேதான் இருவண்ணக் கொடி பொலிவோடும், பூரிப்போடும், வலிமையோடும் இன்றைக்கும் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கிறது.

இன்றைக்கு இன்பத் தமிழ்நாட்டின் கிராமப் பகுதிகளில் எல்லா இடங்களிலும் மாவட்டம் தொடங்கி, கிளைக்கழகம் வரை லட்சோப லட்சம் இளைஞர்கள் இந்த கழகக் கொடியை ஏந்துகிறார்கள் என்று சொன்னால், அந்தப் பெருமை இளைஞர் அணியின் செயலாளர் மாண்பமை உதயநிதி ஸ்டாலின் அவர்களைச் சாரும்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது, ஓர் அறிவு இயக்கம். அரசியல் இயக்கம் என்பதைக் கடந்து, சமுதாய இயக்கம் என்பதைக் கடந்து, கலாச்சார இயக்கம் என்பதைக் கடந்து, தலைவர் முதல்வர் அவர்கள் தொடர்ந்து சொல்லுகிற அந்த வார்த்தைகள்தான் அறிவு இயக்கம். இந்த அறிவு இயக்கத்தினுடைய ஆயுதங்கள்தான் பேனாவும், நாவும்.

### கழகம் என்ற பேரியக்கம்



இந்திய அரசியல் கண்டத்தில் எத்தனையோ அரசியல் கட்சிகள் தங்கள் கட்சியின் தலைமை அலுவலகத்துக்குப் பெயர் சூட்டி இருக்கிறார்கள். ஆனால் ‘அறிவாலயம்’ என்று பெயர் சூட்டிய ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரியக்கம் மட்டும்தான். அறிவுத் திருவிழா நடத்துகிற வணக்கத்திற்குரிய இளைஞர் அணியின் செயலாளர் மாண்பமை துணை முதல்வர் அவர்களே, ஒரு சொல், ஒரு கல், ஒரு எண்,

ஒரு சொல் - சனாதனம் என்ற சொல். ‘அந்த சொல் இந்த மண்ணிலே காலூன்றுவதற்கு இடமில்லை. சாதி ஏற்றத்தாழ்வுகளைத் திணிக்கிற அந்த சொல்லுக்கு இடமில்லை’ என்று முழங்கினீர்களே, தந்தை பெரியாரின் பேரப்பிள்ளையாக முழங்கினீர்களே அந்த சொல்லை.



ஒரு கல். ஒருக்காலும் பி.ஜே.பி, ஆர்.எஸ்.எஸ். பாசிச சக்திகள் இந்த மண்ணில் காலூன்ற முடியாது என்று ஒரு கல்லைக் கையிலே ஏந்தியவர் மாண்பமை உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

ஒரு எண். ஒரு அட்டை அந்த அட்டையிலே ஒரே ஒரு எண் 29 என்று மாண்பமை உதயநிதி அவர்கள் எழுதி பாமர மக்களிடத்தில் எடுத்துச் சென்று ‘இது என்ன 29? ஆம், தமிழ்நாடு தன்னுடைய நிதியிலிருந்து வரி வசூலித்து, ஒன்றிய அரசுக்கு ஒரு ரூபாய் தருகிறது. ஆனால், ஒன்றிய அரசோ தமிழ்நாட்டுக்கு 29 பைசா தருகிறது’ என்று மாநில சுயாட்சி தத்துவத்தை எளிமையாக ஒரு எண்ணிலே சொன்னவர் மாண்பமை உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

### தமிழ், தமிழ்நாடு, தமிழர்

இயக்கத்திற்கும் அரசியல் கட்சிக்கும் வேறுபாடு உண்டு. அதனால்தான் நான் வியந்து போனேன். அற்புதமாக தலைப்பைத் தந்திருக்கிறீர்கள். இந்த இயக்கம் ஆட்சிக் கட்டிலிலே இருந்தாலும் இல்லை என்றாலும் தமிழ், தமிழ்நாடு, தமிழர் என்பதற்காக பாடுபடக்கூடிய அற்புதமான இயக்கம்.

வரலாறு என்று சொல்லுகிற பொழுது ஒரு வரலாறு அல்ல. கொடி வரலாறு, கொடியோடு இணைந்து பயணிக்கிற இலட்சியங்களின் வரலாறு, இலட்சியங்களுக்காக நடத்திய போராட்ட வரலாறு, அந்தப் போராட்டத்தில் தலை நிமிர்ந்து நின்ற தலைவர்களின் வரலாறு என்று பல வரலாறுகளை உள்ளடக்கி இருக்கக்கூடிய வரலாறாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரியக்கம் வாழ்கிறது.

கலிங்கத்துப்பரணி, புறநானூறு படித்திருப்பீர்கள். கலிங்கத்துப் பரணியிலும் புறநானூற்றிலும் தமிழ்ச் சமுதாயத்தின் போர்க்குண வரலாறு இருக்கிறது. ஐயா கலைஞர் சொல்கிறார், ‘கலிங்கத்துப்பரணியையும் புறநானூற்றையும் பாராட்டக்கூடிய தமிழ்ச்சமுதாயத்தைச் சார்ந்த ஆன்றோர்களே, சான்றோர்களே திராவிட முன்னேற்றக் கழகத்தின் போராட்ட வரலாறு இருக்கிறதே அதுவும் அப்படிப்பட்ட வரலாறு’ என்று சொல்வார்கள்.

### சமூகநீதி, பெண்ணுரிமை

உயிர்மூச்சுக் கொள்கைகளாக இருக்கக்கூடிய சமூகநீதி, பெண்ணுரிமை, மத நல்லிணக்கம், மாநில சுயாட்சி, இருமொழிக்கொள்கை ஆகிய இலட்சியங்களை சுமந்திருக்கிற இயக்கம் என்கிற காரணத்தால்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரியக்கம் இந்த வரலாற்றில் நிலைத்து நிற்கிறது. இந்தியாவில் எந்த மாநிலத்தில் 69 விழுக்காடு இடஒதுக்கீடு இருக்கிறது? மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு உள் இட ஒதுக்கீடு, அருந்ததியருக்கு உள் இடஒதுக்கீடு, இஸ்லாமியர்களுக்கு உள் இடஒதுக்கீடு சட்டப்பூர்வமாக, சட்ட பாதுகாப்போடு இருக்கக்கூடிய அந்த வரலாற்றில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரியக்கம் வாழ்கிறது.

பிற மாநிலங்களில் இருப்போரெல்லாம் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சமூக நீதி பற்றி பேச வேண்டும் என்று சொன்னால், அவர்கள் கோடிட்டுக் காட்டுகிற ஒரு மாநிலம் திராவிட மாடல் அரசை தலைமை தாங்குகிற வணக்கத்திற்குரிய தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கிச் சென்றிருக்கிற இன்றைய முதல்வர் அவர்களின் தமிழ்நாடு.

எந்த மாநிலத்தில் தமிழ்நாட்டில் கொண்டு வந்ததைப் போல புரட்சிகரமான சட்டம். அனைத்து சாதிக்காரர்களும் அர்ச்சகர் ஆகலாம் என்று சொல்ல சட்டம் இருக்கிறது? சமத்துவத்தைப் போதிக்கக்கூடிய சட்டம், அண்ணல் அம்பேத்கர் அவர்கள், அறிவு ஆசான் தந்தை பெரியார் அவர்கள் இருவரும் நினைத்த அந்தக் கனவு இருக்கிறதே அந்தக் கனவை நிறைவேற்றி இருக்கக்கூடிய அனைத்து சாதியினரும் அர்ச்சகர் என்று சொல்லக்கூடிய அந்த சட்டம் இருக்கிறதே அது வரலாற்றில் வாழக்கூடியது.

### திராவிட முன்னேற்றக் கழகம்

36 ஆண்டுகளுக்கு முன்பு பெண்களுக்குச் சொத்துரிமை கொண்டு வந்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக்கழகம். ‘உனக்கு படிக்க உரிமை இல்லை’ என்று சொன்ன காலம் போய், இன்றைக்கு பூமிப்பந்தில் வாழ்கின்ற உயர்ந்த நாடுகளில் அறிவுச்சக்தியாகத் தமிழ்ப்பெண்கள் திகழ்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற வாழும் பேரியக்கம்தான்.

மராட்டிய மாநிலத்தில் ஒட்டுமொத்த தாக்கரே குடும்பமும், ‘அதோ பார் தமிழ்நாட்டை, திராவிட மாடல் அரசைப் பார், முதலமைச்சராக இருக்கிற ஸ்டாலினைப் பார், ஆதிக்க இந்தியை எதிர்க்கிற தமிழ்நாட்டைப் போல மராட்டிய மாநிலத்தில் எதிர்ப்போம்’ என்று சொல்லுகிறார்களே, அந்த போராட்ட வரலாறும் இதிலே அடங்கி இருக்கிறது.

### இளைஞர் அணி கையில்

நாம் எல்லா லட்சியங்களிலும் வெற்றி பெற்றிருக்கிறோம். மேடைப் பேச்சில், எழுத்தில், கலைத்துறையில், இலக்கியத்தில், திரையுலகில். சமூக நீதியில் இயக்கம் வெற்றி பெற்றிருக்கிறது, பெண்ணுரிமையில் வெற்றி பெற்றிருக்கிறது, மதச்சார்பின்மையிலே வெற்றி பெற்றிருக்கிறது. இருமொழிக் கொள்கையில் வெற்றி பெற்றிருக்கிறது. மாண்பமை உதயநிதி அவர்களே, இதோ உங்கள் இளைஞர் அணி கையில் மாநில சுயாட்சி முழக்கத்தை ஒப்படைக்கிறோம். அந்த மாநில சுயாட்சியை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு, உங்களிடத்தில் இருக்கிறது.

கடந்த பத்தாண்டு காலத்தில் அ.தி.மு.க ஆட்சி நடக்கிறபொழுது எடப்பாடி தலைமையில் நான்காண்டு காலம், அதற்கு முன்பு அம்மையார் காலம் அந்த ஆட்சி எல்லாம் மத்தியில் இருக்கக்கூடிய அரசுக்கு மண்டியிடக்கூடிய அரசாக இருந்தது. ஆனால், இதோ என் பாட்டன் திருவள்ளுவன் சொல்கிறான். எது நல்ல அரசு என்றால்.

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு

என்கிறான். அப்படி தமிழ்ச் சமுதாயத்தின் மானம் காக்கும் திராவிட மாடல் அரசை, இங்கு இருக்கக்கூடிய இளைஞர் அணி தம்பிமார்களே, 2026-இல் நாம் மீண்டும் கொண்டு வருவோம். ●

## அனைவரும் போற்றும் அறிவுத்திருவிழா!

**‘கருஞ்சட்டை பதிப்பக’த்தைச் சேர்ந்த இக்லாஸ் உசேன், ‘அறிவுத் திருவிழா’ குறித்து முகநூலில் எழுதிய பதிவு :**



‘கடந்த 9 நாட்களாக நடந்து முடிந்துள்ளது சென்னை முற்போக்கு புத்தகக் காட்சி. கருத்தியல் சார்ந்த புத்தக அரங்குகள் மட்டுமே கொண்ட புத்தகக் காட்சியாக இது நடந்து முடிந்துள்ளது.

கிட்டத்தட்ட 35 லட்சம் ரூபாய் மதிப்பிலான புத்தகங்கள் விற்பனையானதாக துணை முதல்வர் தெரிவித்துள்ளார்கள். ஆம், கருஞ்சட்டைப் பதிப்பகம் மட்டுமே இந்தத் தொகையில் 5% புத்தகங்கள் விற்பனை செய்துள்ளது.

அந்த 35 லட்சத்தில் சுமார் 25 லட்சத்துக்கு மேல் கொள்கை சார்ந்த புத்தகங்கள் மட்டுமே இந்தப் புத்தகக் காட்சியில் விற்பனையாகியுள்ளன. இது இதுவரை நடந்த புத்தகக் காட்சியில் நடக்காத விஷயம்.

பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ் மற்றும் கருத்தியல் சார்ந்த புத்தகங்கள் மட்டுமே இந்தப் புத்தகக் காட்சி அரங்குகள் முழுக்க நிரம்பி இருந்தன. அந்த வகையில், இது ஒரு நல்ல கருத்துப் பரப்புரை புத்தகக் காட்சி என்றே குறிப்பிடலாம்.

அதேபோல் நிகழ்வு ஏற்பாடு செய்தது ஏதோ சடங்கு போல் இல்லாமல் மிகச் சிறப்பாக திட்டமிட்டு செய்திருந்தார்கள். அரங்கில் இருக்கும் நபர்களுக்கு உணவு தேநீர் வழங்குவது தொடங்கி, பாதுகாப்பு வரை அனைத்திலும் முழுமையாக ஒத்துழைப்பு கொடுத்தது முற்போக்கு புத்தகக் காட்சி நிர்வாகம்.